# இடம், எண், காலம், திணை, பால் என்றால் என்ன ?

இனி வரும் கருத்துருக்களைக் கலந்துரையாடல் முறையில் அமைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இது உங்களது புரிதலை மிகுதியாக்கும் என்றும் நம்புகிறேன். வாழ்த்துகள். தொடருவோம்.

---------------------------------------------------------------

தொடர் என்றால் என்ன என்று ஒரு நண்பர் கேட்டார். வாக்கியம் என்பது அயற்சொல், தொடர் என்பதுதான் சரியான தமிழ்ச் சொல் என்று மடல் எழுதினேன்.

எளிய தொடர்களை அமைக்கும்பொழுது நிறைய வினாக்கள் எழுவதாக நண்பர் மடல் எழுதியிருந்தார். அவை அனைத்தும் சொல்லாடலில் எழுகிற பிரச்சனைகள் தான். எனவே பிரச்சனைகளை ஒவ்வொன்றாகக் காண்போம்.

1) தன்மை, முன்னிலை, படர்க்கை என்றால் என்ன என்று புரியவில்லையே. விளக்குங்கள்.

| |
|---|
| தன்மை - தன்னைப் பற்றிக் கூறுவது |
| முன்னிலை - முன்னால் உள்ளவரைப் பற்றியது (அருகில் இருக்கும்) |
| படர்க்கை - முன்னால் இருப்பவை, ஆனால் தொலைவில் இருக்கும். |

தன்மை - தன்னைப் பற்றிக் கூறுவது

தன்மை = நான், எனது, என்னுடைய என்று தன்னைப் பற்றி சொல்வது.

முன்னிலை = முன்னால் உள்ளவரைப் பற்றியது (அருகில் இருப்பவை)

நீ, உன், உனது, உன்னுடைய, (முன்னால் உள்ளவர் ஒருவராக இருந்து அருகில் இருந்தால்)
இவன், இவள், இவர் (முன்னால் உள்ளவர் ஒருவராக இருந்து அருகில் இருந்தால்)
இவர்கள் (முன்னால் உள்ளவர் பலராக இருந்து அருகில் இருந்தால்)
இது (முன்னால் உள்ளது அஃறிணையாக இருந்து) (ஒன்று மட்டும் இருந்தால்)
இவை (முன்னால் உள்ளவை அஃறிணையாக இருந்து) (பல (ஒன்றுக்கு மேற்பட்டவை) இருந்தால்)

படர்க்கை - முன்னால் இருப்பவை தொலைவில் இருக்கும்.

அவன், அவள், அவர் (முன்னால் உள்ளவர் ஒருவராக இருந்து தொலைவில் இருந்தால்)
அவர்கள் (முன்னால் உள்ளவர் பலராக இருந்து தொலைவில் இருந்தால்)
அது (முன்னால் உள்ளது அஃறிணையாக இருந்து) (ஒன்று மட்டும் தொலைவில் இருந்தால்)
அவை (முன்னால் உள்ளவை அஃறிணையாக இருந்து) பல (ஒன்றுக்கு மேற்பட்டவை இருந்தால்)

| |
|---|
| தன்மை, முன்னிலை, படர்க்கை என்பவை அமைவிடத்தைக் குறித்து வேறுபடுவதால் தன்மை, முன்னிலை, படர்க்கை என்பவை, இடம் என்ற தலைப்பில் வைக்கப்பட்டுள்ளன. |

## 2) ஒருமை, பன்மை என்றால் என்ன ?

ஒன்று இருந்தால் ஒருமை.
பல இருந்தால் பன்மை.

ஒன்று மட்டும் இருப்பது ஒருமை

(நான், எனது, என்னுடைய, நீ, உன், உனது, உன்னுடைய, இவன், இவள், இவர், இது, அவன், அவள், அவர், அது)

ஒன்றுக்கு மேற்பட்டு இருப்பவை பன்மை ( இரண்டு இருந்தாலே பன்மைதான்)

(இவர்கள், அவர்கள், இவை, அவை)

கள் என்பது பன்மைக்கான விகுதி. செடி ஒருமை, செடிகள் பன்மை.

இவை, அவை என்பவற்றுடன் "கள்" விகுதி சேர்த்து எழுதக்கூடாது. ஆனால் பலரும் இவைகள், அவைகள் என்றே எழுதுகிறார்கள், இது தவறு.

ஒருமையில் தொடர் இருந்தால் அந்தத் தொடரில் து விகுதி தான் வரவேண்டும்.

(எனது, என்னுடையது, உனது, உன்னுடையது, இவனது, இவளது, இவரது, அவனது, அவளது, அவரது, அது)

(சான்றாக = செடி வளர்கிறது, கல் விழுகிறது, ஆடு நடக்கிறது, சண்டை நடக்கிறது, குளம் தெரிகிறது, ஊர்தி ஓடுகிறது, மீன் துள்ளுகிறது)

பன்மையில் தொடர் இருந்தால் அந்தத் தொடரில் ன, கள் விகுதிகள் வரவேண்டும்.

(செடிகள் வளர்கின்றன, கற்கள் விழுகின்றன, ஆடுகள் நடக்கின்றன, இவர்கள் போராடுகிறார்கள்)
அவர்கள் அடிக்கிறார்கள், இவை நடக்கின்றன, அவை ஓடுகின்றன, சண்டைகள் நடக்கின்றன. ஊர்திகள் ஓடுகின்றன, மீன்கள் நீந்துகின்றன, பாடல்கள் பிழையாக எழுதப்பட்டுள்ளன)

பெரும்பாலான நாளிதழ்களும், வார இதழ்களும், தொலைக்காட்சிகளும் இதைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. பிழையாகவே பயன்படுத்துகின்றன. அவற்றைக் கேட்பவர்களும் அதுபோலவே பிழையாகப் பேசுகின்றனர்.

ஒருமை, பன்மை என்பவை எண்ணிக்கையின் அடிப்படையில் குறிப்பிடப்படுவதால் இவை எண் என்ற தலைப்பில் சுட்டப்படுகின்றன.

## 3) காலம் என்றால் என்ன ?

காலங்கள் நிகழ்காலம், கடந்தகாலம், எதிர்காலம் என மூன்று வகைப்படும்.

நிகழ்காலம் என்பது நிகழ்ந்து கொண்டிருப்பது, கடந்தகாலம் என்பது கடந்து போனது, எதிர்காலம் என்பது இனிவருவது.

நிகழ்காலம் - இன்று நடப்பது நிகழ்காலம் ( கிறு, கின்று )

நான் படிக்கிறேன், நீ படிக்கிறாய், இவன் படிக்கிறான், இவள் படிக்கிறாள், இவர் படிக்கிறார், இவர்கள் படிக்கிறார்கள், இது நடக்கிறது, அவன் படிக்கிறான், அவள் படிக்கிறாள், அவர் படிக்கிறார், அது நடக்கிறது, நான் படிக்கிறேன் என்று சொன்னால் நான் இன்று படிக்கிறேன் என்றுதான் பொருள்.

(மேலுள்ள தொடர்களில் கிறு என்ற சொல் உள்ளது. கிறு வந்தால் அது நிகழ்காலம்)

அவை நடக்கின்றன, அவன் எழுதுகின்றான், அவள் எழுதுகின்றாள், அவர் எழுதுகின்றார். நான் படிக்கின்றேன், நீ படிக்கின்றாய், இவன் படிக்கின்றான், இவள் படிக்கின்றாள்.
செயல் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருந்தால் (present continuous) கின்று என்கிற சொல் வரும்.

(மேலுள்ள தொடர்களில் இடம்பெற்றுள்ள வினைச் சொற்களில் கின்று என்ற சொல் உள்ளது. கின்று என்ற சொல் வந்தாலும் அது நிகழ்காலம் தான்)

வினைச் சொற்களில் கிறு, கின்று என்கிற காலம் காட்டும் இடைநிலைகள் வந்தால் அவை நிகழ்காலம் காட்டும். இடைச் சொல்லின் பயன்பாடு மொழியில் எவ்வளவு இன்றியமையாத்து என்பது இப்பொழுது உங்களுக்குப் புரிகிறது அல்லவா?

கடந்தகாலம் - நேற்று நடந்தது - கடந்தகாலம். ( த், ந் )

நான் படித்தேன், (படி+த்+த்+ஏன்) நீ படித்தாய், இவன் படித்தான், இவள் படித்தாள், இவர் படித்தார், இவர்கள் படித்தார்கள், இது பறந்தது, (பற+ந்+ந்+அது) இவை நடந்தன, அவன் படித்தான், அவள் படித்தாள், அவர் படித்தார், அது நடந்தது, அவை நடந்தன,

(மேலுள்ள தொடர்களில், இடம்பெற்றுள்ள வினைச் சொற்களில், த், அல்லது ந் என்ற எழுத்துகள் உள்ளன. த் அல்லது ந் என்பவை கடந்த காலம் காட்டும் இடைநிலைகள்.)

வினைச்சொற்களில் த், ந் என்கிற காலம் காட்டும் இடைநிலைகள் வந்தால் அவை கடந்தகாலம் காட்டும்.

எதிர்காலம் - நாளை என்பது எதிர்காலம். ( ப், வ் )

நான் படிப்பேன், (படி+ப்+ப்+ஏன்) நீ படிப்பாய், இவன் படிப்பான், இவள் படிப்பாள், இவர் படிப்பார், இவர்கள் படிப்பார்கள், இவன் செய்வான், (செய்+வ்+ஆன்) இவை நடக்கும், அவன் படிப்பான், அவள் படிப்பாள், அவர் படிப்பார், அது நடக்கும், அவை நடக்கும்.

(மேலுள்ள தொடர்களில் உள்ள வினைச்சொற்களில், ப், க் அல்லது வ் என்கிற எழுத்துகள் உள்ளன. ப், க், வ் என்கிற என்கிற இடைநிலைகள் தொடரில் வந்தால் அந்தத் தொடர் எதிர்காலம் காட்டும் தொடர் ஆகும்)

வினைச் சொற்களில் ப், வ், க் இடைநிலைகளைக் கொண்ட வினைச்சொற்கள் எதிர்காலம் காட்டும்.

நிகழ்காலம், கடந்தகாலம், எதிர்காலம் என்பவை காலத்தைக் குறித்து வேறுபடுவதால் இவை, காலம் என்ற தலைப்பில்வைக்கப்பட்டுள்ளன.

## 4) அஃறிணை, உயர்திணை என்றால் என்ன ? பால் என்றால் என்ன ?

அஃறிணை = உயிர் அற்றவை, தாவரங்கள், விலங்குகள்

உயிர் அற்றவை (கல், மண், வீடு) + தாவரங்கள் (மரம், செடி, கொடி) + விலங்குகள் (ஆடு, மாடு, நாய்)

அஃறிணைப் பொருள்கள் ஒருமையில் இருந்தால் **து** என்ற விகுதி வரும்.

கல் உள்ளது, மண் இருக்கிறது, வீடு உள்ளது, மரம் வளர்கிறது, செடி அசைகிறது, கொடி படர்கிறது, ஆடு மேய்கிறது, மாடு கத்துகிறது, நாய் குரைக்கிறது. ஒருமையில் உள்ள அஃறிணைப் பொருள்கள் அனைத்திற்கும் பின் ஒட்டாக வரும் விகுதி து என்று வரும்.

அஃறிணைப் பொருள்கள் பன்மையில் இருந்தால் **ன** என்கிற விகுதி வரும்.

கற்கள் இருக்கின்றன, மண்துகள்கள் ஆகின்றன, வீடுகள் உள்ளன, மரங்கள் வளர்கின்றன, செடிகள் அசைகின்றன, கொடிகள் படர்கின்றன, ஆடுகள் மேய்கின்றன, மாடுகள் கத்துகின்றன, நாய்கள் குரைக்கின்றன, பன்மையில் உள்ள அஃறிணைப் பொருள்கள் அனைத்திற்கும் பின் ஒட்டாக வரும் விகுதி ன என்று வரும்.

உயர்திணை = மனிதன்.

ஆணாக இருந்தால் ஆண்பால், பெண்ணாக இருந்தால் பெண்பால்

(ஆண்பாலுக்கு விகுதி **ன்**, பெண்பாலுக்கு விகுதி **ள்**, உயர்திணைக்கு விகுதி **ர்**)

(அருகில் / ஒருமை) இவன் செய்கிறான், இவள் செய்கிறாள், இவர் செய்கிறார்,

(தொலைவில் / ஒருமை) அவன் செய்கிறான், அவள் செய்கிறாள், அவர் செய்கிறார்.

(அருகில் / பன்மை) இவர்கள் செய்கிறார்கள்

(தொலைவில் / பன்மை) அவர்கள் செய்கிறார்கள்.

அஃறிணை, உயர்திணை என்பவை திணை என்கிற தலைப்பில் வைக்கப்பட்டுள்ளன.
ஆண்பால், பெண்பால் என்பவை பால் என்கிற தலைப்பில் வைக்கப்பட்டுள்ளன.

தொடரில் உள்ள எழுவாயின் / பெயரின் தன்மையை அறிந்து அதற்குரிய விகுதிகளை, இடைநிலைகளை பயனிலையில் இணைத்தால் நீங்கள் எழுதுகிற தொடரில் பிழையே வராது.

இடம், எண், காலம், திணை, பால் என்றால் என்ன என்று அறிந்து கொண்டீர்கள் அல்லவா.
வாழ்த்துகள். இனிப் பிழையின்றி எழுதப் பயிற்சி எடுக்கவும்.

| அஃறிணை |  | மரம் + மரம் = மரங்கள்<br>(ஒருமை , பன்மை ) |
|---|---|---|

| | | | | ஒருமை | பன்மை |
|---|---|---|---|---|---|
| அஃறிணை | உயிரற்றவை | | சொல் | கல் | கற்கள் |
| | | | கடந்த காலம் | இருந்த து | இருந்த ன |
| | | | நிகழ் காலம் | இருக் கிறது | இருக் கின்றன |
| | | | எதிர் காலம் | இருக் கும் | இருக்கும் |
| | | | அருகில் | இது | இவை |
| | | | தொலைவில் | அது | அவை |
| | உயிருள்ளவை | தாவரங்கள் | சொல் | செடி | செடிகள் |
| | | | கடந்த காலம் | வளர்ந்த து | வளர்ந்த ன |
| | | | நிகழ் காலம் | வளர் கிறது | வளர் கின்றன |
| | | | எதிர் காலம் | வள ரும் | வள ரும் |
| | | | அருகில் | இது | இவை |
| | | | தொலைவில் | அது | அவை |
| | | விலங்குகள் | சொல் | மாடு | மாடுகள் |
| | | | கடந்த காலம் | நடந்த து | நடந்த ன |
| | | | நிகழ் காலம் | நடக் கிறது | நடக் கின்றன |
| | | | எதிர் காலம் | நடக் கும் | நடக் கும் |
| | | | அருகில் | இது | இவை |
| | | | தொலைவில் | அது | அவை |

| ஒருமை | பன்மை |
|---|---|
| து, கிறது | ன, கின்றன |

உயர்திணை - மனிதன்

| | | | ஒருமை | பன்மை |
|---|---|---|---|---|
| உயர்திணை / மனிதன் | தன்மை | சொல் (தன்மை ) | நான் | நாங்கள் (நாம் ) |
| | | கடந்த காலம் | நடந்தேன் | நடந்தோம் |
| | | நிகழ் காலம் | நடக்கிறேன் | நடக்கிறோம் |
| | | எதிர் காலம் | நடப்பேன் | நடப்போம் |
| | முன்னிலை | சொல் (முன்னிலை ) | நீ | நீங்கள் |
| | | கடந்த காலம் | நடந்தாய் | நடந்தீர்கள் |
| | | நிகழ் காலம் | நடக்கிறாய் | நடக்கிறீர்கள் |
| | | எதிர் காலம் | நடப்பாய் | நடப்பீர்கள் |
| | படர்க்கை | சொல் (படர்க்கை ) | இவன் , அவன் (ஆண்பால் ) | இவர்கள் |
| | | கடந்த காலம் | நடந்தான் | நடந்தார்கள் |
| | | நிகழ் காலம் | நடக்கிறான் | நடக்கிறார்கள் |
| | | எதிர் காலம் | நடப்பான் | நடப்பார்கள் |
| | | சொல் (படர்க்கை ) | இவள் , அவள் (பெண்பால் ) | இவர்கள் |
| | | கடந்த காலம் | நடந்தாள் | " |
| | | நிகழ் காலம் | நடக்கிறாள் | " |
| | | எதிர் காலம் | நடப்பாள் | " |
| | | சொல் (படர்க்கை ) | இவர் (பலர்பால் ) | இவர்கள் |
| | | கடந்த காலம் | நடந்தார் | " |
| | | நிகழ் காலம் | நடக்கிறார் | " |
| | | எதிர் காலம் | நடப்பார் | " |
| | ஆண்பால் | பெயர்ச்சொல் | கண்ணன் (ஆண்பால் ) | |
| | | கடந்த காலம் | படித்தான் | |
| | | நிகழ் காலம் | படிக்கிறான் | |
| | | எதிர் காலம் | படிப்பான் | |
| | பெண்பால் | பெயர்ச்சொல் | மாதவி (பெண்பால் ) | |
| | | கடந்த காலம் | நடித்தாள் | |
| | | நிகழ் காலம் | நடிக்கிறாள் | |
| | | எதிர் காலம் | நடிப்பாள் | |